சார்பு நீதிமன்றம், இலால்குடி.

OS.No.725/2018

2022-ம் ஆண்டு திங்கள் கிழமை மார்ச் 28-ம் நாள் PW1 சாட்சியின் வாக்குமூலம். 54 வது விதிகள் 9 வது பிரிவின்படி இந்நீதிமன்ற இளநிலை உதவியாளர் திரு. எம். சி. அழகேசன், அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி தெரிவிக்கப்படுகிறது.

பெயர் - பிரபாவதி

த/பெ -

வயது -

ஊர் -

வட்டம் -

மாவட்டம் -

முதல் விசாரணை தொடர்ச்சி

10.10.2013 ம் தேதியில் செல்வக்குமாரிக்கு திரவியம் பிள்ளை எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.1. 19.02.2010 ம் தேதியில் அமுதா மற்றும் பலரிடம் இருந்து திரவியம்பிள்ளை தாவா ஏ அட்டவணை சொத்தை கிரையம் பெற்றதைக் காட்டக்கூடிய கிரைய பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.2. தாவா பி அட்டவணை சொத்தை 25.03.2010 ம் தேதியில் என் பெயருக்கு கிரையம் வாங்கியதைக் காட்டக்கூடிய கிரைய பத்திரத்தின் சான்றிட்ட சார்பதிவாளர் நகல் வா.சா.ஆ.3. (மேற்படி ஆவணத்தின் அசல் வீட்டில் எங்கோ வைத்துவிட்டதால் அதை தேடி கண்டுபிடிக்க முடியாத நிலையில் அதன் நகல் தாக்கல் செய்யப்படுகிறது). 07.08.2009 ம் தேதியில் சமயபுரம் ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு தாவா சொத்து மற்றும் அதை சுற்றியுள்ள பிளாட்டுகளின் உரிமையாளருக்காக அமுதா என்பவர் எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணத்தின் பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் வா.சா.ஆ.4.